**மதுவரிக் கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்)**

**மதுவரி அறிவித்தல் இல. 990**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கில் அல்லது தீர்வையற்ற கடைகளில் வெளிநாட்டு நாணய அலகில் விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானத்தின் மீது 2016.08.26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் 989 ஆம் இலக்க மது வரி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்ட மதுவரியானது 2016.10.04 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், அறவிடப்படலாகாது என இக்கட்டளை மூலம் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி.